**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 12** |
| **Name** | : | **திரு. ராஜா** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.02.2024**

எதிரி2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் பேரையூர் தாலுகா, பழையூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். சுமார் 7,8 வருடங்களுக்கு முன்பு 01.10.2016ம் தேதியன்று மர்டர் நடந்ததாக கேள்விப்பட்டு, பழையூர் சுந்தரராஜப்பெருமாள் கோவில் இடத்தில் மலையடிவாரத்திற்கு அருகில், ஒரு பெண்ணின் பிரேதம் புதைக்கப்பட்டு, அவரது வலது கால் மட்டும் தெரிந்தது. மண் போட்டு மூடியிருந்தது. அதன் மேல் முள் போட்டு இருந்தது. போலிசார் அங்கு வந்து கம்பு கட்டி மார்க் செய்தார்கள். அன்று காலை 11.00 மணிக்குப் போனோம். நானும் ஜோதிராஜா என்பவரும் பார்வை மகஜரில்

கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகஜர் அதசாஆ.2 ஆகும்.** அன்று பகல் சுமார் 12.30 மணிக்கு போலிசார் அந்த இடத்தில் இருந்து மண் எடுத்தார்கள். **அந்த மண் அசாபொ.2 ஆகும்.** அந்த அத்தாட்சியில் நானும் ஜோதிராஜா என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த அத்தாட்சி அதசாஆ.3 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் வரைபடத்தை போலிசார் அந்த இடத்தைப் பார்வையிட்டு சுற்றி வரைந்தார்கள். என்னுடன் கையொப்பம் செய்த ஜோதிராஜா தற்போது உயிருடன் இல்லை. இறந்துவிட்டார். பேரையூர் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

குருசாமி, கருத்தப்பாண்டி, பாண்டியராஜான் ஆகியோரைத் தெரியாது. நான் சம்பவ இடத்திற்குச் செல்வதற்கு முன்பு சம்பவ இடத்தில் சுமார் போலிசார் 10 பேர் இருந்தார்கள். சம்பவ இடத்தில் நான் சுமார் 2 மணி நேரம் இருந்தேன். சம்பவ இடத்திற்கு நான் காலை சுமார் 10.30 மணி முதல் 11.00 மணிக்கு சென்றிருப்பேன். சம்பவ இடத்தில் சுமார் 50 பேர் இருந்தார்கள். அந்த 50 பேர் மொத்தமாக இருந்தார்கள். அவர்கள் யார் யார் என்று பெயர் தெரியாது. அந்த ஊரின் கிராம நிர்வாக அலுவலர் யார் என்று தெரியாது. சம்பவ இடத்தில் இருந்து மண் எடுத்தது போலிசார் என்று தெரியும். போலிசில் எந்த அதிகாரி மண் எடுத்தார் என்று தெரியாது. நான் விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் போலிசார் 3 பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். நான்

சொன்னது போல் சொன்ன இடத்திற்குப் போகவில்லை என்றும் போலிசாரிடம் எந்த காகிதத்திலும் கையொப்பம செய்து கொடுக்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து, போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 13** |
| **Name** | : | திரு. ராமர் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.02.2024**

எதிரி2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் பேரையூர் தாலுகா, பழையூரில் குடியிருந்து வருகிறேன். தனியார் கம்பெனியி வேலை செய்கிறேன். கடந்த 01.10.2016 ம் ஆண்டு கல்லணை மலை அடிவாரத்தில் சுந்ததரராஜபெருமாள் கோவிலுக்கு சம்பந்தப்பட்ட நிலத்தில் ஒரு பெண் சடலம் புதைக்கப்பட்டு தோண்டி எடுக்கப்பட்டிருந்தது. அங்கு போலிசார் பார்த்து வரைபடம் போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் 01.10.2016 அன்று மதியம் சுமார் 01.00 மணிக்கு பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் செய்தேன். **பார்வை மகஜர் அதசாஆ.4 ஆகும்.** நானும் கருப்பசாமி என்பவரும் கையொப்பம் செய்தோம். அன்றைய தினம் பகல் 01.15 மணிக்கு பிரேதம் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து 5 பிளாஸ்டிக் பைகளில் மாதிரிக்காக மண் எடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன்

கருப்பாசமி என்பவரும் அதில் கையொப்பம் செய்தார். **அத்தாட்சி அதசாஆ.5 ஆகும். பிரேதத்தை தோண்டி எடுத்த பிறகு அந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட 5 பிளாஸ்டிக் பைகளில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகள் அசாபொ.3 ஆகும்.** பேரையூர் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

குருசாமி, பாண்டியராஜான், கருத்தப்பாண்டி ஆகியோரை யார் என்று எனக்குத் தெரியாது. பிரேதம் புதைக்கப்பட்டிருந்த இடத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. அந்த இடம் சுந்ததரராஜப்பெருமாள் கோவில் இடம் ஆகும். பிரேதம் இருந்த இடத்தில் சுமார் 20 நிமிடம் இருந்தேன். அதன் பிறகு 100 அடி தள்ளி நின்று வேடிக்கைப் பார்த்தேன். பிரேதத்தைத் தோண்டி எடுக்கும் போது நான் பார்க்கவில்லை. அசாபொ.3 மண்ணை எந்த போலிஸ் அதிகாரியால் எடுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. நான் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்குச் செல்லவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து அதசாஆ.4,5 ல் கையொப்பம் செய்தேன் என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை